**ஏப்ரல் – 15**

**"பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன். (சேமித்து வைக்கிறேன்)." - லூக் 23 : 46.**

நிறைவான நம்பிக்கையோடு நமது பிரிய மீட்பர் பிதாவை அண்ணாந்து பார்த்து விசுவாசத்தினால் நிறைந்தவராய், ஜீவனில் எல்லாவற்றையும் வருங்காலத்திற்காக, நம்பிக்கையின் எல்லாவற்றையும், பிதாவின் அன்புக்கும், பிதாவின் வல்லமைக்கும் தேவனின் ஏற்பாடு, வல்லமை இவைகளுக்கு இசைவாகக் கொடுக்கப்படுவதற்காக ஒப்புவித்ததாகக் கூறினார். இவ்விதமாக செய்ய போதகரின் அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாகிய நாமும், நம்பிக்கையோடு எதிர்பார்க்க வேண்டும். நம்முடைய மீட்பராக அவர் கொடுத்த அவருடைய குமாரனின் ஈவில் மாத்திரமல்லாமல், நமது எல்லா பிரயாணத்தின் ஊடேயும், நமக்குமுன் செல்லுகிறதும், பெலனையும், ஆறுதலையும், உறுதியையும் கொடுக்கிறதுமான அவருடைய தெய்வாதீனமான கவனிப்பிலும், மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களிலும் தமது அன்பை நமக்காக வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய பாதுகாப்புக்கு நம்முடைய எல்லா உரிமைகளையும் நம்முடைய மரண நேரத்தில் ஒப்புவிக்க வேண்டும். **-Z ’99, 128 (R 2473).**

தமது மரணத்துக்கு வெகுசில நிமிஷங்களுக்கு முன்பு நம்முடைய கர்த்தர் தேவனால் கைவிடப்பட்டவராக உணர்ந்தாலும், சரியாகத் தமது மரண நேரத்தில், தேவ தயவின் உணர்வை திரும்பப் பெற்றார். ஆகையால் அவரை பிதாவே என்று அழைத்தார். பிதாவின் தயவில் அவ்வளவு முற்றிலுமாக நம்பிக்கை இருந்ததால், பிதா ஜீவனைத் திரும்பக் கொடுப்பார் என்ற பூரண உறுதியை உடையவராயிருந்து, தம்முடைய வருங்கால ஜீவியத்துக்கான அவருடைய நம்பிக்கையை எந்தவிதமான சந்தேகமுமின்றி பிதாவின் வல்லமைக்கு ஒப்புவித்தார். தமது மானிட ஜீவனுக்குரிய உரிமையையும், மானிட ஜீவாதார உரிமைகளையும் மற்றவர்களுடைய உபயோகத்திற்காக அவர் தமது பிதாவினிடத்தில் சேமித்து வைத்தார் என்றும், சொற்களின்படி மொழிபெயர்ப்பு காட்டுகிறது. **-P ’20, 71.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

1நாளா 5:20; 2நாளா 33:12,13; யோபு 1:20,21; 2:9; சங் 22:1-21; 31:5; 89:26; ஏசா 53; மத் 26:39; யோவா 8:11; அப் 7:59,60; 21:14; 1பேது 2:21-24; பிலி 2:8; எபி 2:9,4; 12:3,4; 1பேது 4:12-14; 2தீமோ 4:6.

**கோபுர வாசிப்பு : Z’15, 38 (R 5621).**

**வினாக்கள் :** ஒப்புவிக்கப்பட்ட கிறிஸ்துவின் புண்ணியம் இந்த வாரத்தில் எனக்கு எப்படிப் பிரயோஜனமாயிருந்தது? தேவனிடம் அவர் வைத்துள்ள நம்பிக்கை இவ்வாரத்தில் என்னை எப்படிப் பாதித்தது? இவற்றிலிருந்து என்னென்ன ஆசீர்வாதங்கள் எனக்கு இவ்வாரத்தில் வந்தன? என் மூலம் மற்றவர்களுக்கு என்ன ஆசீர்வாதங்கள் கிடைத்தன?